<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>
<u>MCOP No: 05/2025</u>

2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 24 ம் நாள் pw2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | சண்முக சுந்தரம் |
| த.க.பெயர் | சென்னியப்பன் |
| கிராமம் | சிப்காட் , ஈங்கூர்பெருந்துறை |
| மாவட்டம் | |
| வயது | 55 |

<u>ம.சா. 2 நாள் 24.07.2026</u>

**<u>முதல் விசாரணை:</u> (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

நான் மனுதாரர் தரப்பு சாட்சி.

<u>குறுக்கு விசாரணை ( 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>

இறந்து போனவர் எனக்கு உறவினர் அல்ல, பக்கத்து ஊர்காரர். விபத்து சம்பந்தமாக அடுத்த நாள் தான்புகார் கொடுத்தேன் என்றால் சரி. நான் டிரான்ஸ்போாட் பிசினஸ் செய்து வருகிறேன். நான்டிரான்ஸ்போாட் பிசினஸ் செய்து வருவதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. விபத்து கிழமேல் தேசிய நெடுஞ்சாலையில் நடந்தது என்றால் சரி. இரு சக்கர வாகன ஓட்டுநர் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றார். லாரி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தது. கிழமேல் நெடுஞ்சாலையில் தென்வடல் ரோடு சந்திக்கும் இடத்தில் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் லாரி சரியான திசையில் தான் வந்தது என்றும் அதன் ஓட்டுநர் மெதுவாகவும் கவனமாகவும் தான் வந்தார் என்றும் இரு சக்கர வாகன ஓட்டுநர் தலைக் கவசம் அணியாமல் இரு சக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி வந்து லாரி மீது மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டாா என்றால சரியல்ல. தலைக் கவசம் அணியாமல் சென்றதால் தான் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு இறப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு முழு காரணம் இறந்து

போனவரின் கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்தை நேரில் பார்க்காமல் இறந்த நபரின் குடும்பத்தினருக்கு உறவினர் என்பதால் அவர்களுக்கு உதவி செய்ய பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்த்திருந்தால் உடனடியாக புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் இந்த விபத்து சம்பந்தமாக வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. நான் மனுதாரர்களுக்கு உதவ வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரின் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது)

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.07.24 12:48:23 +0530

Subordinate Judge,
Perundurai.